## 134. கர்த்தர் என் பட்சத்திலே

### பல்லவி

கர்த்தர் என் பட்சத்திலே
அவர் வார்த்தை என் உள்ளத்திலே
இருக்கும்போது எனக்கு விரோதமாய்
யார் இருக்க முடியும்

### சரணங்கள்

1. கிறிஸ்து இயேசுவின் இரத்ததினால்
நீதிமானாக மாற்றப்பட்டேன்
எனக்கு விரோதமாய் குற்றப்படுத்த
யார் இருக்க முடியும்
- கர்த்தர் என்

2. என் வாழ்வின் வாசல்களை
தேவனே திறந்துள்ளார்
அவர் திறந்த வாசல்களை
யார் அடைக்க முடியும்
- கர்த்தர் என்

3. சத்துருவின் ஆயுதங்கள்
என் வாழ்வில் நுழையாதே
தேவனே வேலியடைத்ததை
யார் திறக்க முடியும்
- கர்த்தர் என்